# அப்போஸ்தலனாகிய பவுல் தீத்துவுக்கு எழுதின நிருபம்

இளம் ஊழியனுக்கு...

# தீத்துவுக்கு எழுதின நிருபத்தின பின்னணி

- தீத்து, பவுலின் "விசுவாசத்தின்படி உத்தம குமாரன்" 1:4
- தீத்துவின் பெயர் அப்போஸ்தல நடபடிகளில் இடம்பெறவில்லை. ஆனாலும் பவுலின் நிருபங்களிலிருந்து அவரைக் குறித்து அறிந்துகொள்ள முடிகிறது.
- அவர் பிறப்பால் புறஜாதியான்(கலா 2:3), விருத்தசேதனம் குறித்த சர்ச்சை எழுந்த நேரத்தில் பவுலோடு எருசலேமுக்கு பயணம் செய்தவர் (அப் 15:1-2, கலா 2:1-5)
- பவுலின் மூன்றாவது மிஷனரிப்பயணத்தின்போது பவுலின் முதலாவது கொரிந்திய நிருபம் என்ன தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்று அறிய பவுலின் தூதனாக கொரிந்து பட்டணத்திற்கு சென்றவர்.
- தீத்து, துரோவாவிற்கு எதிர்பார்த்தபடி வந்துசேராதால் பவுல் கவலையோடு மக்கேதோனியாவிற்கு கிளம்பிச் சென்றார் (2கொரி 2:12-13)
- இறுதியாக அங்கே பவுலும், தீத்துவும் சந்தித்துக்கொண்டார்கள். தீத்து நல்ல முறையில் கொரிந்துவில் வரவேற்கப்பட்டதை பவுல் அறிந்து மகிழ்வுற்றார் (2கொரி 7:5-7,13-15)
- பின்பு பவுல் தீத்துவையும் வேறிருவரையும் திரும்பவும் கொரிந்துவிற்கு தமது இரண்டாவது நிருபத்தை கொடுத்தனுப்பி, அதில் எருசலேமில் உள்ள பரிசுத்தவான்களுக்காக சேர்க்கப்படும் பணத்தை சேர்த்துமுடிக்க கேட்டுக்கொண்டார் (2கொரி 8:16-9:5)

# தீத்துவுக்கு எழுதின நிருபத்தின பின்னணி

- தீத்துக்கான நிருபம் எழுதப்பட்டபோது அவர் பவுலினால் கிரேத்தா தீவில் “குறைவாயிருக்கிறவைகளை ஒழுங்குபடுத்தும்படிக்குமபட்டணங்கள்தோறும் மூப்பரை ஏற்படுத்தும்படிக்கும்” விடப்பட்டிருந்தார் (1:5)
- பவுலின் இறுதி நாட்களில் தீத்து தல்மாத்தியா (தற்போதைய யூகோசிலாவியா) நாடடிற்கு சென்றிருந்ததுதான் தீத்துவைக் குறித்து நாம் இறுதியாக வாசிப்பது.
    - அதிகாரங்கள் 3
    - வசனங்கள் 46

# தீத்துவுக்கு எழுதின நிருபம்

- தீமோத்தேயுவுக்கு எழுதின முதலாவது நிருபத்தை போலவே இந்த நிருபமும் ஒரு இளம் பிரசங்கியாருக்கு கடினமான பணிகளை செய்ய கட்டளையிட்டு எழுதப்பட்டது.
- கிரேத்தா தீவில் இருந்த சபைகளுக்கு நிச்சயமாகவே ஒரு முதிர்ச்சி தேவையாயிருந்தது. இந்த நிருபம் அதை செய்வதற்கு தீத்துவுக்கு உதவும் ஆலோசனைகளை கொண்டிருந்தது.
- இது கடினமான பணியாக இருந்ததற்கு காரணம் கிரேத்தாதீவாரின் இதிகாச காவியங்களில் அவாக்ளை குறித்து "ஓயாப்பொய்யர், துஷ்டமிருகங்கள், பெருவயிற்றுச் சோம்பேறிகள்" என்று எழுதப்பட்டிருக்கிறது. பவுல் இதை வழிமொழிந்து "இந்தச் சாட்சி உண்மையாயிருக்கிறது" என்று எழுதுகிறார் (1:12-13)
- ஆகவே பவுல் தீத்துவை உற்சாகப்படுத்தும்படி எழுதினபோது:
  - தகுதிவாய்ந்த மூப்பர்கள் பட்டணங்கள்தோறும் நியமிக்கப்படும்படி பார்த்துக்கொள்ளவும் 1:5-9
  - ஆரோக்கியமான உபதேசத்துக்கேற்றவைகளைப் பேசவும் 2:1
  - சபையார் நற்கிரியைகளைச்செய்யப் பக்திவைராக்கியமுள்ளவர்களாக இருக்க அவர்களுக்குப் போதிக்கவும் 2:14, 3:1,8,14 கட்டளையிட்டார்.
- நிருபத்தின் கருத்துரு: இந்த நிருபத்தின் முக்கிய சொற்றொடர் "நற்கிரியைகள்" (1:16,2:7,2:14,3:1,3:8,3:14)
- திறவுகோல் வசனம்: 3:8

இந்த வார்த்தை உண்மையுள்ளது; தேவனிடத்தில் விசுவாசமானவர்கள் நற்கிரியைகளைச் செய்யஜாக்கிரதையாயிருக்கும்படி நீ இவைகளைக்குறித்துத் திட்டமாய்ப் போதிக்கவேண்டு மென்று விரும்புகிறேன்; இவைகளே நன்மையும் மனுஷருக்குப் பிரயோஜனமுமானவைகள்.

# தீத்துவுக்கு எழுதின நிருபத்தின் முக்கிய பகுதிகள்

அறிமுகம் (1:1-4)

சபையின் அமைப்பை குறித்த அறிவுரைகள் (1:5-16)

- மூப்பர்களுக்கான தகுதிகள் (1:5-9)
- கள்ளப் போதகர்களின் சுபாவங்கள் (1:10-16)

கிறிஸ்தவ நடக்கை குறித்த அறிவுரைகள் (2:1-3:11)

- முதிர்வயது ஆண்களுக்கும், பெண்களுக்கும் (2:1-3)
- இளவயது ஆண்களுக்கும், பெண்களுக்கும் (2:4-8)
- வேலைக்காரர்களுக்கு (2:9-14)
- பொதுவாக சகோதர சகோதரிகளுக்கு (3:1-11)

முடிவுரை (3:12-15)